# 18 திருச்சபையின் கட்டளைகள்

உலகிலே பல நாடுகளிலும் கத்தோலிக்கர்கள் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் திருச்சபையின் அங்கத்தவர்களாவர். இறைவார்த்தையின் அடிப்படையில் இவர்களை நல்வழியில் நடத்திச் செல்வது திருச்சபையின் தலைவர்களது கடமையாக உள்ளது. இறைவனால் அளிக்கப்பட்ட பத்துக் கட்டளைகளோடு இறை மக்களை நல்வழியில் நடத்திச் செல்ல (திருச்சபையால்) ஐந்து கட்டளைகள் தரப்பட்டுள்ளன.

அவையாவன:-

1. ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் முழுத்திருப்பலியில் பங்கேற்பது.
2. ஆண்டிற்கு ஒரு முறையாவது ஒப்புரவு அருளடையாளம் பெறுவது.
3. பாஸ்கு காலத்தில் தேவ நற்கருணை உட்கொள்வது.
4. குறிப்பிட்ட தினங்களில் ஒருசந்தி, சுத்தபோசனம் அனுசரித்தல்
5. திருச்சபையின் பராமரிப்பிற்கு உதவுதல்.

## 1. ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் முழுத்திருப்பலியில் பங்கேற்பது

இறை தந்தைக்கு இறைமக்கள் நாம் ஒப்புக் கொடுக்கும் பலி திருப்பலியாகும். ஞாயிறு தினங்களிலும் கடன்திரு நாட்களிலும் திருப்பலியிலே பங்கு கொள்வது இறைமக்களின் கடமையாகும். இக்கடன் நிறைவு பெற வேண்டுமாயின் முழுத் திருப்பலியிலும் பங்கு கொள்ள வேண்டியது அவசியமாகும். அவ்வாறாயின் வருகைப் பாடலிலிருந்து திருப்பலியில் நன்றிப் பாடல் வரையிலும் - திருப்பலியில் செயற்பாட்டுடன் பங்கு கொள்ள வேண்டும். திருப்பலியில் அவ்வாறு செயற்பாட்டுடன் பங்கு கொள்ளுவதற்கு தடையாக உள்ள வீண் பேச்சுகளைத் தவிர்த்து முழு உள்ளத்தோடும் பங்கு கொள்ள வேண்டும். திருப்பலி செபங்களிலும் பாடல்களிலும் பங்கு பற்றுவோம்.

நோயுற்றிருப்போர், அருகாமையில் திருப்பலி நடைபெறாத சூழலில்

இருப்போர், அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டிருப்போர் ஆகியோர் திருப்பலியில் கலந்து கொள்ளா திருப்பதால் தவறிழைப்பதில்லை. இதைத்தவிர ஏழு வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் கடன் திருநாட்களில் திருப்பலியில் பங்கேற்க வேண்டும்.

மேலும் தகுந்த காரணங்களுக்காக திருப்பலியில் பங்கேற்க வாய்ப்பு இல்லாத போது பொருத்தமானதொரு செப வழிபாட்டில் கலந்து கொள்ளவோ, அல்லது தனித்து செபத்தில் ஆழ்ந்திருக்கவோ முயற்ச்சி எடுக்க வேண்டும்.

திருச்சபையின் கட்டளையாக இருப்பதற்காக அன்றி, இறை தந்தையில் தமக்கிருக்கும் மரியதை, பக்தி அன்பைக் காட்டுவதற்காக ஞாயிறு திருப்பலியில் பங்கேற்க வேண்டும்.

## 2. ஆண்டிற்கு ஒரு முறையாவது ஒப்புரவு அருளடையாளம் பெறுவது

சமூகத்தில் வாழும் பொழுது பல வேளைகளிலே பாவங்கள் செய்கின்றோம். சில வேளைகளில் அறிந்தும் சில வேளைகளில் அறியாமலும் பாவங்களைச் செய்கின்றோம். எமது பிழைகள் குறைகள், பாவங்கள் காரணமாக எமது சகோதர சகோதரிகள், அயலவர், நாம் பழகுபவர்கள் ஆகியோருடனான நல்லுறவில் பாதிப்பு ஏற்படலாம், எம்மிடையே இருக்க வேண்டிய சகோதர உறவு முறிந்து விடலாம்.

சாவான பாவம் அல்லது கன்ம பாவம் நாம் செய்திருந்தால் அப்பாவத்திற்காக ஒப்புரவு அடையாளம் மூலம் மன்னிப்பு பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் அடிக்கடி ஒப்புரவு அடையாளத்தை பெற்று உள்ளத் தூய்மை பெறுவது விரும்பத்தக்கது.

சாவான பாவம் செய்யாவிடின் வருடத்தில் ஒருமுறையேனும் ஒப்புரவு அடையாளம் பெற்றுக் கொள்வோம்.

## 3. பாஸ்கு காலத்தில் தேவ நற்கருணை உட்கொள்வது

ஒரு காலத்தில் மனிதரிடையே தேவநற்கருணை பெற்றுக் கொள்வதற்கு இருந்த பயத்தினால் குறிப்பாக பாஸ்கா காலத்திலாவது நற்கருணைப் பெறுவதற்கு இக் கட்டளை வழிசமைக்கின்றது. இக் காலத்திலே திருப்பலியின் போது தேவ நற்கருணையைப் பெற்றுக் கொள்ளுமாறு திருச்சபை எமக்குக் கற்பிக்கிறது. நாம் பங்குகொள்கின்ற திருப்பலியிலே முழுமையாகப் பங்கு கொள்ள வேண்டுமாயின் கட்டாயம் தேவநற்கருணை பெற்றுக்கொள்ள வேண்டும்.

## 4. குறிப்பிட்ட தினங்களில் ஒருசந்தி, சுத்தபோசனம் அனுசரித்தல்

★ **சுத்த போசனம் (மாமிச தவிர்ப்பு)**

மாமிசத் தவிர்ப்பு என்பது குறிப்பிட்ட தினங்களில் தரை வாழ் உயிரினங்கள், மிருகங்களின் இறைச்சியை உண்ணாதிருப்பதாகும்.

அத்தகைய தினங்கள்

- விபூதிப் புதன்
- பெரிய வெள்ளி
- வருடத்தின் எல்லா வெள்ளிக் கிழமைகள்

★ **ஒருசந்தி**

ஒரு சந்தி அனுசரித்தல் என்றால் ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே நிறைவான உணவு உண்ணுதல், ஏனைய இரு வேளைகளில் உண்ணாதிருத்தல் அல்லது சிறிதளவான உணவு மட்டுமே உண்ணுதலாகும். ஒரு சந்தி அனுசரிப்பதன் நோக்கம்,

- தமது பாவங்களுக்கு பரிகாரம் செய்தல்.
- ஆன்மீக வாழ்வில் வளர பயிற்சிப்பெறல்.
- உணவு உண்ணாமல் நாற்பது நாட்கள் நோன்பிருந்த இயேசுவைப் பின்பற்றுதல்.

ஒருசந்தி நாட்களில் ஒருவர், தான் உண்ணாமல், அந்த உணவை பசியோடிருக்கும் ஒருவருக்கு அளிக்குமாறு திருச்சபை எமக்குக் கற்பிக்கிறது. அவ்வாறு கொடுத்தல், ஒருசந்தி அனுசரிப்பதன் முக்கிய நோக்கமாகும்.

18 - 60 வயதிற்குட்பட்டோர் ஒருசந்தி அனுசரிக்கப் பணிக்கப்பட்டுள்ளனர். ஆனால் நோயாளர், வயது முதிர்ந்தோர் இதற்கு விதிவிலக்கு. இருப்பினும் மற்றவர்கள் தம் சொந்த விருப்பத்தின்பேரில் ஒருசந்தி அனுசரிக்கலாம்.

விபூதிப் புதன், பெரிய வெள்ளி ஆகிய தினங்களில் ஒருசந்தி அனுசரிக்க நியமிக்கப்பட்டிருந்தாலும் மற்ற தினங்களில் தமது சொந்த விருப்பத்தின் பேரில் ஒருசந்தி அனுசரிக்கலாம்.

## 5. திருச்சபையின் பராமரிப்பிற்காக உதவுதல்

எந்த ஒரு நிறுவனத்தினதும் ஒன்றியத்தினதும் வளர்ச்சிக்காக அதன் அங்கத்தினர் தம்மால் இயன்ற விதத்தில் தியாகம் செய்வது வழக்கமாகும்.

அவ்வாறே திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் தேவைகளுக் காகவும் அதன் உறுப்பினர் தம்மால் இயன்றவரை தியாகம் செய்யவேண்டுமென இக்கட்ட ளையில் அறிவுறுத்தப்படுகின்றது. பங்கின் பலவித இரக்கப்பணி களுக்காகவும் இத்தியாகம் (காணிக்கை) பயன்படுத்தப்படுகிறது.

**செயற்பாடு**

1. திருச்சபையின் கட்டளைகள் ஐந்தையும் எழுதுக.
2. திருப்பலியில் செயற்பாட்டுடன் பங்குகொள்வதற்கு நீர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூன்றை எழுதுக.
3. மாமிசத் தவிர்ப்பு, ஒருசந்தி அனுசரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள நாட்களை வெவ்வேறாக எழுதுக.
4. ஒருசந்தி அனுசரித்தல் என்றால் என்ன?



***வாழ்க்கைக்கு...............***

- ★ *ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் முழுத் திருப்பலியில் பங்கேற்போம்.*
- ★ *வருடத்தில் ஒருமுறையேனும் ஒப்புரவு அருளடை யாளத்தைப் பெறுவோம்.*
- ★ *குறிப்பிட்டதினங்களில் ஒருசந்தி அனுசரிப்போம்.*